1990 ஏப்ரல் 5]

பிக்கப்படுமென்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்போது அந்த அனுமதி கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய துணைப் பதிவாளர் 1-8-1989-ம் தேதியன்று அந்த வங்கிக்கான பதிவினைச் செய்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து 6-10-1989-ம் தேதியன்று பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. வங்கி நடவடிக்கைகள், பேங்கிங் ஆக்டிவிடீஸ் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி தேவைப்படுகிறது. அதற்காக நபார்ட் மூலமாக ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது விரைவில் கிடைக்குமென்று நம்புகிறோம். கிடைத்தவுடன் வங்கி அதன் பணியினைத் தொடங்கும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த வங்கியை ஆரம்பிக்கும்போது இன்றைக்கு மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் பணி புரியக்கூடிய ஊழியர்களையே பிரித்து காயிதே மில்லத் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு ஆட்களை நியமிப்பார்களா அல்லது புதிதாக ஆட்களை வங்கிக்குத் தேர்ந்தெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் காலப் போக்கில் பரிசீலிக்கப்படும்.

விற்பனை விளைப்பொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

* 5181 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தென் ஆற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் விற்பனை விளைபொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்ட நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் நடைபெறுகின்ற இடம் மிகவும் நெருக்கடியான இடம், சமூக விரோதிகளுக்கு இடம் தரக்கூடிய இடம். தயவு செய்து அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, நிலத்தைக் கையகப்படுத்தி கட்டிடம் கட்டிக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் ஒரு இடத்திலும், மற்றொரு இடத்திலே 14 ஏக்கர் நிலமும் பார்க்கப்பட்டு, நெகோசியேஷன்ஸ் நடைபெறுகிறது, நேரடியாக விலை பேசப்பட்டு வருகிறது. பேசி முடிந்தவுடன் இந்த ஆண்டு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

போர்வெல் போடுதல்.

* 5476 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பாசனக் கிணறுகள் பல வறண்டு விட்டதால், அரசே குறைந்த கட்டணம் பெற்று வேளாண்மைத் துறை மூலம் போர்வெல் போட்டுக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மைப் பொறியியல் துறையால் குறைந்த வாடகையில் துளை போடும் கருவிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரும், விடுதலை வீரரும், பகுதித்தறிவுப் பகலவனுமாகிய தந்தை பெரியார் பிறந்த பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியிலே உள்ள அனைத்து விவசாயிகளுடைய கிணறுகள் எல்லாம், கடந்த 3, 4 ஆண்டுகளாக மழை பொய்த்ததன் காரணமாக வறண்டு போய்விட்டன, அங்கேயுள்ள மக்கள்....